மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வேலை நிறுத்தம்

*** 340 வினா.—கொளத்தூர் கோதண்டம்** : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1969-ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் வேலை நிறுத்தம் நடந்ததா?

(இ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம். இந்த ஆலையில் 28—11—69 முதல் 10—12—69 முடிய ஒரு வேலை நிறுத்தம் நடந்தது.

(இ) சென்னை 3-வது தொழிலாளர் துறை அலுவலரின் நிலுவையிலிருந்த கோரிக்கைகளைத் தீர்ப்பதில் நிர்வாகத்தின் தரப்பில் தாமதம் ஆனதால் வேலைநிறுத்தம் செய்ய நேர்ந்தது என்பது தொழிலாளர்கள் சங்கத்தின் வாதம். சங்கத்தலைவர் மதுராந்தகத்தில் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த சமயத்தில் அவருக்குப் போக்குவரத்து வசதி கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதே வேலை நிறுத்தத்திற்கு உடனடி காரணமாகும்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : வேலைநிறுத்தம் நடைபெற்ற நேரத்தில் வேறு தொழிலாளர்களை வைத்து வேலை நடத்தினார்களா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்தத் தொழிற்சாலையில் 469 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அறுபது பேர்கள்தான் வேலைக்குப் போகவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. பின்னால் வேலை நிறுத்தம் சுமுகமாக முடிந்துவிட்டது.

Tank Bund Poramboke lands in Peravallur

* 318 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the land T.S. No. 382/1 measuring 110.72 acres of Peravallur village, North West Taluk, Madras was transferred from Tank Bund Poramboke to house-sites:

(*b*) whether the hut dwellers of Muthuvelar Kudiyiruppu (Agaram) in the above land S. No. 382/1 were evicted on 12th July 1968 by the Tahsildar, North-West, Madras, without any prior intimation;

(*c*) whether the above land has subsequently been taken over by the Madras Housing Unit of the State Housing Board for allotment of house-sites to the Tamil Nadu Secretariat Association, the Tamil Nadu Non-gazetted Officers Union and The Tamil Nadu Last Grade Government Servants' Association; and

(*d*) if so, the action taken to rehabilitate the original hut dwellers?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) இல்லை.